ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமழிசைப்பிரான் அருளிச்செய்த

# நான்முகன் திருவந்தாதி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# நான்முகன் திருவந்தாதி

## சீராமப்பிள்ளை அருளிச்செய்த தனியன்

நாராயணன் படைத்தான் நான்முகனை ⋆
நான்முகனுக்கேரார் சிவன் பிறந்தான் என்னும் சொல் ⋆
சீரார் மொழி செப்பி வாழலாம் நெஞ்சமே ! ⋆
மொய்பூ மழிசைப் பரன் அடியே வாழ்த்து

‡ நான்முகனை ⋆
நாராயணன் படைத்தான் ⋆
நான்முகனும் தான் முகமாய்ச் ⋆
சங்கரனைத் தான் படைத்தான் ⋆
யான் முகமாய் அந்தாதி மேலிட்டு ⋆
அறிவித்தேன் ஆழ் பொருளை ⋆
சிந்தாமல் கொண்மின் நீர் தேர்ந்து ‖ **1** ‖

தேருங்கால் தேவன் ⋆
ஒருவனே என்றுரைப்பர் ⋆
ஆரும் அறியார் அவன் பெருமை ⋆
ஓரும் பொருள் முடிவும் இத்தனையே ⋆
எத்தவம் செய்தார்க்கும் ⋆
அருள் முடிவதாழியான் பால் ‖ **2** ‖

பாலில் கிடந்ததுவும் ⋆
பண்டரங்கம் மேயதுவும் ⋆

ஆலில் துயின்றதுவும் ஆர் அறிவார் ⋆
ஞாலத்தொரு பொருளை ⋆
வானவர் தம் மெய்ப் பொருளை ⋆
அப்பில் அரு பொருளை யான் அறிந்த வாறு ‖ **3** ‖

ஆறு சடைக் கரந்தான் ⋆
அண்டர் கோன் தன்னோடும் ⋆
கூறுடையன் என்பதுவும் கொள்கைத்தே ⋆
வேறொருவர் இல்லாமை நின்றானை ⋆
எம்மானை ⋆
எப் பொருட்கும் சொல்லானைச் சொன்னேன் தொகுத்து ‖ **4** ‖

தொகுத்த வரத்தனாய்த் ⋆
தோலா தான் மார்வம் ⋆
வகிர்த்த வளை உகிர் தோள் மாலே ⋆
உகத்தில் ஒருநான்று நீ உயர்த்தி ⋆
உள் வாங்கி நீயே ⋆
அரு நான்கும் ஆனாய் அறி ‖ **5** ‖

அறியார் சமணர் ⋆
அயர்த்தார் பவுத்தர் ⋆
சிறியார் சிவப்பட்டார் செப்பில் ⋆
வெறியாய மாயவனை மாலவனை ⋆
மாதவனை ஏத்தாதார் ⋆
ஈனவரே ஆதலால் இன்று ‖ **6** ‖

இன்றாக ⋆
நாளையே ஆக ⋆
இனிச் சிறிதும் நின்றாக ⋆

நின் அருள் என் பாலதே ⋆
நன்றாக நான் உன்னை அன்றி ⋆
இலேன் கண்டாய் ⋆
நாரணனே நீ என்னை அன்றி இலை ‖ **7** ‖

இலை துணை மற்றென் நெஞ்சே ⋆
ஈசனை வென்ற ⋆
சிலை கொண்ட செங்கண் மால் சேரா ⋆
குலை கொண்ட ஈர் ஐந்தலையான் ⋆
இலங்கையை ஈடழித்த ⋆
கூர் அம்பன் அல்லால் குறை ‖ **8** ‖

குறை கொண்டு நான்முகன் ⋆
குண்டிகை நீர் பெய்து ⋆
மறை கொண்ட மந்திரத்தால் வாழ்த்தி ⋆
கறை கொண்ட கண்டத்தான் ⋆
சென்னி மேல் ஏறக் கழுவினான் ⋆
அண்டத்தான் சேவடியை ஆங்கு ‖ **9** ‖

ஆங்காரவாரம் அது கேட்டு ⋆
அழல் உமிழும் பூங்கார் அரவணையான் ⋆
பொன்மேனி ⋆
யாம் காண வல்லமே அல்லமே ⋆
மா மலரான் வார் சடையான் ⋆
வல்லரே அல்லரே வாழ்த்து ‖ **10** ‖

வாழ்த்துக வாய் ⋆
காண்க கண் கேட்க செவி ⋆
மகுடம் தாழ்த்தி வணங்குமின்கள் தண் மலரால் ⋆

சூழ்த்த துழாய் மன்னு நீள் முடி ⋆
என் தொல்லை மால் தன்னை ⋆
வழா வண் கை கூப்பி மதித்து ‖ **11** ‖

மதித்தாய் போய் நான்கின் ⋆
மதியார் போய் வீழ ⋆
மதித்தாய் மதிகோள் விடுத்தாய் ⋆
மதித்தாய் மடுக் கிடந்த ⋆
மா முதலை கோள் விடுப்பான் ⋆
ஆழி விடற்கிரண்டும் போய் இரண்டின் வீடு ‖ **12** ‖

வீடாக்கும் ⋆
பெற்றி அறியாது ⋆
மெய் வருத்திக் கூடாக்கி ⋆
நின்றுண்டு கொண்டுழல்வீர் ⋆
வீடாக்கும் மெய்ப் பொருள் தான் ⋆
வேத முதற்பொருள் தான் ⋆
விண்ணவர்க்கு நற் பொருள் தான் நாராயணன் ‖ **13** ‖

நாராயணன் ⋆
என்னை ஆளி ⋆
நரகத்துச் சேராமல் காக்கும் திருமால் ⋆
தன் பேரான பேசப் பெறாத ⋆
பிணச் சமயர் பேசக் கேட்டு ⋆
ஆசைப் பட்டாழ்வார் பலர் ‖ **14** ‖

பல தேவர் ஏத்தப் ⋆
படி கடந்தான் பாதம் ⋆
மலர் ஏற விட்டிறைஞ்சி வாழ்த்த வலர் ஆகில் ⋆

மார்க்கண்டன் கண்ட வகையே ⋆
வரும் கண்டீர் ⋆
நீர்க்கண்டன் கண்ட நிலை ‖ **15** ‖

நிலைமன்னும் என் நெஞ்சம் ⋆
அந்நான்று ⋆
தேவர் தலைமன்னர் தாமே மாற்றாக ⋆
பல மன்னர் போர் மாள ⋆
வெம் கதிரோன் மாயப் பொழில் மறைய ⋆
தேர் ஆழியால் மறைத்தாரால் ‖ **16** ‖

ஆல நிழற்கீழ் ⋆
அறநெறியை ⋆
நால்வர்க்கு மேலை யுகத்துரைத்தான் மெய்த் தவத்தோன் ⋆
ஞாலம் அளந்தானை ⋆
ஆழிக் கிடந்தானை ⋆
ஆல்மேல் வளர்ந்தானைத் தான் வணங்குமாறு ‖ **17** ‖

மாறாய தானவனை ⋆
வள் உகிரால் ⋆
மார்விரண்டு கூறாகக் ⋆
கீறிய கோளரியை ⋆
வேறாக ஏத்தி இருப்பாரை ⋆
வெல்லுமே ⋆
மற்றவரை சார்த்தி இருப்பார் தவம் ‖ **18** ‖

தவம் செய்து ⋆
நான்முகனால் பெற்ற வரத்தை ⋆
அவஞ்செய்த ஆழியாய் அன்றே ⋆

உவந்தெம்மைக் காப்பாய் நீ ⋆
காப்பதனை ஆவாய் நீ ⋆
வைகுந்தம் ஈப்பாயும் எவ்வுயிர்க்கும் நீ ॥ **19** ॥

நீயே உலகெல்லாம் ⋆
நின் அருளே நிற்பனவும் ⋆
நீயே தவத்தேவ தேவனும் ⋆
நீயே எரி சுடரும் மால் வரையும் ⋆
எண் திசையும் ⋆
அண்டத்திரு சுடரும் ஆய இவை ॥ **20** ॥

இவையா ! பில வாய் ⋆
திறந்தெரி கான்ற ⋆
இவையா ! எரிவட்டக் கண்கள் ⋆
இவையா எரி பொங்கிக் காட்டும் ⋆
இமையோர் பெருமான் ⋆
அரி பொங்கிக் காட்டும் அழகு ॥ **21** ॥

அழகியான் தானே ⋆
அரி உருவன் தானே ⋆
பழகியான் தாளே பணிமின் ⋆
குழவியாய்த் தான் ஏழ் உலகுக்கும் ⋆
தன்மைக்கும் தன்மையனே ⋆
மீனாய் உயிர் அளிக்கும் வித்து ॥ **22** ॥

வித்தும் இடவேண்டும் கொல்லோ ⋆
விடை அடர்த்த ⋆
பத்தி உழவன் பழம் புனத்து ⋆
மொய்த்தெழுந்த கார் மேகம் அன்ன ⋆

கரு மால் திருமேனி ⋆
நீர் வானம் காட்டும் நிகழ்ந்து ॥ **23** ॥

நிகழ்ந்தாய் பால் பொன் பசுப்புக் ⋆
கார் வண்ணம் நான்கும் இகழ்ந்தாய் ⋆
இருவரையும் வீயப் புகழ்ந்தாய் ⋆
சினப் போர்ச் சுவேதனைச் ⋆
சேனாபதியாய் ⋆
மனப் போர் முடிக்கும் வகை ॥ **24** ॥

வகையால் மதியாது ⋆
மண் கொண்டாய் ⋆
மற்றும் வகையால் வருவதொன்றுண்டே ⋆
வகையால் வயிரம் குழைத்துண்ணும் ⋆
மாவலி தான் என்னும் ⋆
வயிர வழக்கொழித்தாய் மற்று ॥ **25** ॥

மற்றுத் தொழுவார் ⋆
ஒருவரையும் யான் இன்மை ⋆
கற்றைச் சடையான் கரிக் கண்டாய் ⋆
எற்றைக்கும் கண்டுகொள் கண்டாய் ⋆
கடல்வண்ணா ⋆
யான் உன்னைக் கண்டு கொள்கிற்குமாறு ॥ **26** ॥

மால் தான் புகுந்த மட நெஞ்சம் ⋆
மற்றதுவும் பேறாகக் ⋆
கொள்வனோ பேதைகாள் ⋆
நீராடி தான் காண மாட்டாத ⋆

தார் அகலச் சேவடியை ⋆
யான் காண வல்லேற்கிது ‖ **27** ‖

இதுவிலங்கை ஈடழியக் ⋆
கட்டிய சேது ⋆
இதுவிலங்கு வாலியை வீழ்த்ததுவும் ⋆
இதுவிலங்கை தான் ஒடுங்க வில் நுடங்கத் ⋆
தண் தார் இராவணனை ⋆
ஊன் ஒடுங்க எய்தான் உகப்பு ‖ **28** ‖

உகப்புருவன் தானே ⋆
ஒளி உருவன் தானே ⋆
மகப்புருவன் தானே மதிக்கில் ⋆
மிகப் புருவம் ஒன்றுக்கொன்று ⋆
ஓசனையான் வீழ ⋆
ஒரு கணையால் அன்றிக்கொண்டெய்தான் அவன் ‖ **29** ‖

அவன் என்னை ஆளி ⋆
அரங்கத்தரங்கில் ⋆
அவன் என்னை எய்தாமல் காப்பான் ⋆
அவன் என்னதுள்ளத்து ⋆
நின்றான் இருந்தான் கிடக்குமே ⋆
வெள்ளத்தரவணையின் மேல் ‖ **30** ‖

மேல் நான்முகன் ⋆
அரனை இட்ட விடு சாபம் ⋆
தான் நாரணன் ஒழித்தான் தாரகையுள் ⋆
வானோர் பெருமானை ⋆

ஏத்தாத பேய்காள் ⋆
பிறக்கும் கரு மாயம் பேசின் கதை ॥ **31** ॥

கதைப் பொருள் தான் ⋆
கண்ணன் திருவயிற்றின் உள்ள ⋆
உதைப்பளவு போது போக்கின்றி ⋆
வதைப் பொருள் தான் வாய்ந்த குணத்துப் ⋆
படாததடைமினோ ⋆
ஆய்ந்த குணத்தான் அடி ॥ **32** ॥

அடிச் சகடம் சாடி ⋆
அரவாட்டி ⋆
யானை பிடித்தொசித்துப் பேய் முலை நஞ்சுண்டு ⋆
வடிப்பவள வாய்ப் பின்னை தோளிக்கா ⋆
வல் ஏற்றெருத்திறுத்து ⋆
கோப் பின்னும் ஆனான் குறிப்பு ॥ **33** ॥

குறிப்பெனக்குக் ⋆
கோட்டியூர் மேயானை ஏத்த ⋆
குறிப்பெனக்கு நன்மை பயக்க ⋆
வெறுப்பனோ வேங்கடத்து மேயானை ⋆
மெய் வினை நோய் எய்தாமல் ⋆
தான் கடத்தும் தன்மையான் தாள் ॥ **34** ॥

தாளால் உலகம் ⋆
அளந்த அசைவேகொல் ⋆
வாளா கிடந்தருளும் வாய் திறவான் ⋆
நீளோதம் வந்தலைக்கும் மா மயிலை ⋆

மா அல்லிக் கேணியான் ⋆
ஐந்தலை வாய் நாகத்தணை ॥ **35** ॥

‡ நாகத்தணைக் குடந்தை ⋆
வெஃகா திருவெவ்வுள் ⋆
நாகத்தணை அரங்கம் பேர் அன்பில் ⋆
நாகத்தணைப் பாற்கடல் கிடக்கும் ⋆
ஆதி நெடுமால் ⋆
அணைப்பார் கருத்தன் ஆவான் ॥ **36** ॥

வான் உலவு தீ வளி ⋆
மா கடல் மா பொருப்பு ⋆
தான் உலவு வெம் கதிரும் தண் மதியும் ⋆
மேல் நிலவு கொண்டல் பெயரும் ⋆
திசை எட்டும் சூழ்ச்சியும் ⋆
அண்டம் திருமால் அகைப்பு ॥ **37** ॥

அகைப்பில் மனிசரை ⋆
ஆறு சமயம் புகைத்தான் ⋆
பொரு கடல் நீர் வண்ணன் ⋆
உகைக்குமேல் எத்தேவர் வாலாட்டும் ⋆
எவ்வாறு செய்கையும் ⋆
அப்போதொழியும் அழைப்பு ॥ **38** ॥

அழைப்பன் ⋆
திருவேங்கடத்தானைக் காண ⋆
இழைப்பன் திருக்கூடல் கூட ⋆
மழைப் பேர் அருவி ⋆

மணி வரன்றி வந்திழிய ⋆
யானை வெருவி அரவொடுங்கும் வெற்பு ‖ **39** ‖

வெற்பென்று ⋆
வேங்கடம் பாடினேன் ⋆
வீடாக்கி நிற்கின்றேன் ⋆
நின்று நினைக்கின்றேன் ⋆
கற்கின்ற நூல்வலையில் பட்டிருந்த ⋆
நூலாட்டி கேள்வனார் ⋆
கால் வலையில் பட்டிருந்தேன் காண் ‖ **40** ‖

காணல் உறுகின்றேன் ⋆
கல் அருவி முத்துதிர ⋆
ஓண விழவில் ஒலி அதிர ⋆
பேணி வரு வேங்கடவா ! ⋆
என் உள்ளம் புகுந்தாய் ⋆
திருவேங்கடம் அதனைச் சென்று ‖ **41** ‖

சென்று வணங்குமினோ ⋆
சேண் உயர் வேங்கடத்தை ⋆
நின்று வினை கெடுக்கும் நீர்மையால் ⋆
என்றும் கடிக் கமல நான்முகனும் ⋆
கண் மூன்றத்தானும் ⋆
அடிக் கமலம் இட்டேத்தும் அங்கு ‖ **42** ‖

மங்குல் தோய் சென்னி ⋆
வட வேங்கடத்தானை ⋆
கங்குல் புகுந்தார்கள் காப்பணிவான் ⋆
திங்கள் சடை ஏற வைத்தானும் ⋆

தாமரை மேலானும் ⋆
குடை ஏறத் தாம் குவித்துக் கொண்டு ॥ **43** ॥

கொண்டு குடங்கால் ⋆
மேல் வைத்த குழவியாய் ⋆
தண்ட அரக்கன் தலை தாளால் பண்டெண்ணிப் ⋆
போம் குமரன் நிற்கும் ⋆
பொழில் வேங்கட மலைக்கே ⋆
போம் குமரர் உள்ளீர் புரிந்து ॥ **44** ॥

புரிந்து மலர் இட்டுப் ⋆
புண்டரீகப் பாதம் ⋆
பரிந்து படுகாடு நிற்ப ⋆
தெரிந்தெங்கும் தான் ஓங்கி நிற்கின்றான் ⋆
தண் அருவி வேங்கடமே ⋆
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு ॥ **45** ॥

வைப்பன் மணி விளக்கா ⋆
மா மதியை ⋆
மாலுக்கென்று எப்பொழுதும் கை நீட்டும் யானையை ⋆
எப்பாடும் வேடு வளைக்கக் ⋆
குறவர் வில் எடுக்கும் வேங்கடமே ⋆
நாடு வளைத்தாடுதுமேல் நன்று ॥ **46** ॥

நன்மணி வண்ணன் ஊர் ⋆
ஆளியும் கோளரியும் ⋆
பொன் மணியும் முத்தமும் பூ மரமும் ⋆
பன்மணி நீரோடு ⋆

பொருதுருளும் கானமும் வானரமும் ⋆
வேடுமுடை வேங்கடம் ॥ **47** ॥

வேங்கடமே ⋆
விண்ணோர் தொழுவதுவும் ⋆
மெய்ம்மையால் வேங்கடமே ⋆
மெய் வினை நோய் தீர்ப்பதுவும் ⋆
வேங்கடமே தானவரை வீழத் ⋆
தன் ஆழிப் படை தொட்டு ⋆
வானவரைக் காப்பான் மலை ॥ **48** ॥

மலை ஆமைமேல் வைத்து ⋆
வாசுகியைச் சுற்றி ⋆
தலை ஆமை தான் ஒரு கை பற்றி ⋆
அலையாமல் பீறக் கடைந்த ⋆
பெருமான் திரு நாமம் ⋆
கூறுவதே யாவர்க்கும் கூற்று ॥ **49** ॥

கூற்றமும் சாரா ⋆
கொடு வினையும் சாரா ⋆
தீ மாற்றமும் சாராவகை அறிந்தேன் ⋆
ஆற்றங்கரை கிடக்கும் ⋆
கண்ணன் கடல் கிடக்கும் ⋆
மாயன் உரைக் கிடக்கும் உள்ளத்தெனக்கு ॥ **50** ॥

எனக்காவார் ⋆
ஆர் ஒருவரே ⋆
எம் பெருமான் தனக்காவான் ⋆
தானே மற்றல்லால் ⋆

புனக்காயா வண்ணனே ⋆
உன்னைப் பிறர் அறியார் ⋆
என் மதிக்கு விண் எல்லாம் உண்டோ விலை ॥ **51** ॥

விலைக்காட்படுவர் ⋆
விசாதி ஏற்றுண்பர் ⋆
தலைக்காட்பலி திரிவர் தக்கோர் ⋆
முலைக்கால் விடம் உண்ட வேந்தனையே ⋆
வேறாக ஏத்தாதார் ⋆
கடம் உண்டார் கல்லாதவர் ॥ **52** ॥

கல்லாதவர் ⋆
இலங்கை கட்டழித்த ⋆
காகுத்தன் அல்லால் ⋆
ஒரு தெய்வம் யான் இலேன் ⋆
பொல்லாத தேவரை ⋆
தேவர் அல்லாரை ⋆
திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு ॥ **53** ॥

தேவராய் நிற்கும் ⋆
அத்தேவும் ⋆
அத்தேவரில் மூவராய் நிற்கும் ⋆
முது புணர்ப்பும் ⋆
யாவராய் நிற்கின்றதெல்லாம் ⋆
நெடுமால் என்றோராதார் ⋆
கற்கின்றதெல்லாம் கடை ॥ **54** ॥

கடை நின்றமரர் ⋆
கழல் தொழுது ⋆

நாளும் இடை நின்ற இன்பத்தர் ஆவர் ⋆
புடைநின்ற நீர் ஓத மேனி ⋆
நெடுமாலே ⋆
நின் அடியை யார் ஓத வல்லார் அவர் ‖ **55** ‖

அவர் இவர் என்றில்லை ⋆
அனங்கவேள் தாதைக்கு ⋆
எவரும் எதிர் இல்லை கண்டீர் ⋆
உவரிக் கடல் நஞ்சம் உண்டான் ⋆
கடன் என்று ⋆
வாணற்குடன் நின்று தோற்றான் ஒருங்கு ‖ **56** ‖

ஒருங்கிருந்த நல்வினையும் ⋆
தீவினையும் ஆவான் ⋆
பெரும் குருந்தம் சாய்த்தவனே பேசில் ⋆
மருங்கிருந்த வானவர் தாம் தானவர் தாம் ⋆
தாரகை தான் ⋆
என் நெஞ்சம் ஆனவர் தாம் அல்லாததென் ‖ **57** ‖

என் நெஞ்ச மேயான் ⋆
இருள் நீக்கி எம்பிரான் ⋆
மன் அஞ்ச முன் ஒரு நாள் மண் அளந்தான் ⋆
என் நெஞ்சம் மேயானை ⋆
இல்லா விடை ஏற்றான் ⋆
வெவ்வினை தீர்த்தாயானுக்காக்கினேன் அன்பு ‖ **58** ‖

அன்பாவாய் ⋆
ஆர் அமுதம் ஆவாய் ⋆
அடியேனுக்கின்பாவாய் ⋆

எல்லாமும் நீ ஆவாய் ⋆
பொன் பாவை கேள்வா ⋆
கிளர் ஒளி என் கேசவனே ⋆
கேடின்றி ஆள்வாய்க்கடியேன் நான் ஆள் ‖ **59** ‖

ஆள் பார்த்துழிதருவாய் ⋆
கண்டுகொள் என்று ⋆
நின் தாட் பார்த்துழிதருவேன் தன்மையை ⋆
கேட்பார்க்கரும் பொருளாய் நின்ற ⋆
அரங்கனே ⋆
உன்னை விரும்புவதே விள்ளேன் மனம் ‖ **60** ‖

மனக் கேதம் சாரா ⋆
மதுசூதன் தன்னைத் ⋆
தனக்கே தான் தஞ்சமாக் கொள்ளில் ⋆
எனக்கே தான் இன்றொன்றி நின்றுலகை ஏழ் ⋆
ஆணை ஓட்டினான் ⋆
சென்றொன்றி நின்ற திரு ‖ **61** ‖

திரு நின்ற பக்கம் ⋆
திறவிதென்றோரார் ⋆
கரு நின்ற கல்லார்க்குரைப்பர் ⋆
திருவிருந்த மார்பின் ⋆
சிரீதரன் தன் வண்டுலவு தண் துழாய்த் ⋆
தார் தன்னைச் சூடித் தரித்து ‖ **62** ‖

தரித்திருந்தேன் ஆகவே ⋆
தாராகணப் போர் ⋆
விரித்துரைத்த வெம் நாகத்துன்னை ⋆

தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் ⋆
வணங்கி வழிபட்டும் ⋆
பூசித்தும் போக்கினேன் போது || **63** ||

போதான இட்டிறைஞ்சி ஏத்துமினோ ⋆
பொன் மகரக் காதானை ⋆
ஆதிப் பெருமானை ⋆
நாதானை நல்லானை நாரணனை ⋆
நம் ஏழ் பிறப்பறுக்கும் சொல்லானை ⋆
சொல்லுவதே சூது || **64** ||

சூதாவது ⋆
என் நெஞ்சத்தெண்ணினேன் ⋆
சொல் மாலை மாதாய ⋆
மாலவனை மாதவனை ⋆
யாதானும் வல்லவா ⋆
சிந்தித்திருப்பேற்கு ⋆
வைகுந்தத்தில்லையோ சொல்லீர் இடம் || **65** ||

இடமாவது ⋆
என் நெஞ்சம் இன்றெல்லாம் ⋆
பண்டு பட நாகணை நெடிய மாற்கு ⋆
திடமாக வையேன் ⋆
மதிசூடி தன்னோடு ⋆
அயனை நான் வையேன் ஆட்செய்யேன் வலம் || **66** ||

வலம் ஆக ⋆
மாட்டாமை தான் ஆக ⋆
வைகல் குலம் ஆக ⋆

குற்றந் தான் ஆக ⋆
நலம் ஆக நாரணனை நா பதியை ⋆
ஞானப் பெருமானை ⋆
சீரணனை ஏத்தும் திறம் ॥ **67** ॥

திறம்பேல்மின் கண்டீர் ⋆
திருவடி தன் நாமம் ⋆
மறந்தும் புறம் தொழா மாந்தர் ⋆
இறைஞ்சியும் சாதுவராய்ப் ⋆
போதுமின்கள் என்றான் ⋆
நமனும் தன் தூதுவரைக் கூவிச் செவிக்கு ॥ **68** ॥

செவிக்கின்பம் ஆவதுவும் ⋆
செங்கண் மால் நாமம் ⋆
புவிக்கும் புவியதுவே கண்டீர் ⋆
கவிக்கு நிறை பொருளாய் நின்றானை ⋆
நேர்பட்டேன் ⋆
பார்க்கில் மறைப் பொருளும் அத்தனையே தான் ॥ **69** ॥

தான் ஒருவன் ஆகித் ⋆
தரணி இடந்தெடுத்து ⋆
ஏன் ஒருவனாய் எயிற்றில் தாங்கியதும் ⋆
யான் ஒருவன் இன்றா ⋆
அறிகின்றேன் அல்லேன் ⋆
இரு நிலத்தைச் சென்றாங்கடிப்படுத்த சேய் ॥ **70** ॥

சேயன் அணியன் ⋆
சிறியன் மிகப் பெரியன் ⋆
ஆயன் துவரைக் கோனாய் நின்ற மாயன் ⋆

அன்றோதிய ⋆
வாக்கதனைக் கல்லார் ⋆
உலகத்தில் ஏதிலர் ஆய் மெய்ஞ் ஞானம் இல் ‖ **71** ‖

இல்லறம் அல்லேல் ⋆
துறவறம் இல் என்னும் ⋆
சொல் அறம் அல்லனவும் சொல் அல்ல ⋆
நல்லறம் ஆவனவும் ⋆
நால் வேத மாத் தவமும் ⋆
நாரணனே ஆவதீதன்றென்பார் ஆர் ‖ **72** ‖

ஆரே அறிவார் ⋆
அனைத்துலகும் உண்டுமிழ்ந்த ⋆
பேர் ஆழியான் தன் பெருமையை ⋆
கார் செறிந்த கண்டத்தான் ⋆
எண் கண்ணான் காணான் ⋆
அவன் வைத்த பண்டைத் தானத்தின் பதி ‖ **73** ‖

பதிப் பகைஞர்க்காற்றாது ⋆
பாய் திரை நீர்ப் பாழி ⋆
மதித்தடைந்த வாள் அரவந் தன்னை ⋆
மதித்தவந் தன் வல் ஆகத்தேற்றிய ⋆
மா மேனி மாயவனை ⋆
அல்லாதொன்றேத்தாதென் நா ‖ **74** ‖

நாக் கொண்டு ⋆
மானிடம் பாடேன் ⋆
நலம் ஆகத் தீக் கொண்ட ⋆
செஞ்சடையான் சென்று ⋆

என்றும் பூக் கொண்டு வல்லவாறு ⋆
ஏத்த மகிழாத ⋆
வைகுந்தச் செல்வனார் சேவடிமேல் பாட்டு ‖ **75** ‖

பாட்டும் முறையும் ⋆
படு கதையும் பல் பொருளும் ⋆
ஈட்டிய தீயும் இரு விசும்பும் ⋆
கேட்ட மனுவும் ⋆
சுருதி மறை நான்கும் ⋆
மாயன் தன மாயையில் பட்ட தற்பு ‖ **76** ‖

தற்பென்னைத் ⋆
தான் அறியானேலும் ⋆
தடங்கடலைக் கற் கொண்டு ⋆
தூர்த்த கடல் வண்ணன் ⋆
எற்கொண்ட வெவ்வினையும் நீங்க ⋆
விலங்கா மனம் வைத்தான் ⋆
எவ் வினையும் மாயுமால் கண்டு ‖ **77** ‖

கண்டு வணங்கினார்க்கு ⋆
என்னாங்கொல் ⋆
காமன் உடல் கொண்ட தவத்தாற்குமை உணர்த்த ⋆
வண்டலம்பும் தார் அலங்கல் நீள் முடியான் தன் ⋆
பெயரே கேட்டிருந்து ⋆
அங்கார் அலங்கல் ஆனமையால் ஆய்ந்து ‖ **78** ‖

ஆய்ந்து கொண்டு ⋆
ஆதிப் பெருமானை ⋆
அன்பினால் வாய்ந்த மனத்திருத்த வல்லார்கள் ⋆

ஏய்ந்த தம் மெய் குந்தம் ஆக ⋆
விரும்புவரே ⋆
தாமும் தம் வைகுந்தம் காண்பார் விரைந்து ॥ **79** ॥

விரைந்தடைமின் மேல் ஒரு நாள் ⋆
வெள்ளம் பரக்க ⋆
கரந்துலகம் காத்தளித்த கண்ணன் ⋆
பரந்துலகம் பாடின ⋆
ஆடின கேட்டு ⋆
படு நரகம் வீடின வாசற் கதவு ॥ **80** ॥

கதவு மனம் என்றும் ⋆
காணலாம் என்றும் ⋆
குதையும் வினை ஆவி தீர்ந்தேன் ⋆
விதை ஆக நல் தமிழை வித்தி ⋆
என் உள்ளத்தை நீ விளைத்தாய் ⋆
கற்ற மொழி ஆகிக் கலந்து ॥ **81** ॥

கலந்தான் என் உள்ளத்துக் ⋆
காம வேள் தாதை ⋆
நலம் தானும் ஈதொப்பதுண்டே ⋆
அலர்ந்தலர்கள் இட்டேத்தும் ⋆
ஈசனும் நான்முகனும் ⋆
என்றிவர்கள் விட்டேத்த மாட்டாத வேந்து ॥ **82** ॥

வேந்தராய் விண்ணவராய் ⋆
விண்ணாகித் தண்ணளியாய் ⋆
மாந்தராய் மாதாய் மற்றெல்லாமாய் ⋆
சார்ந்தவர்க்குத் தன் ஆற்றான் நேமியான் ⋆

மால் வண்ணன் தான் கொடுக்கும் ⋆
பின்னால் தான் செய்யும் பிதிர் ॥ **83** ॥

பிதிரும் மனம் இலேன் ⋆
பிஞ்ஞகன் தன்னோடு ⋆
எதிர்வன் அவன் எனக்கு நேரான் ⋆
அதிரும் கழற் கால மன்னனையே ⋆
கண்ணனையே ⋆
நாளும் தொழக் காதல் பூண்டேன் தொழில் ॥ **84** ॥

தொழில் எனக்குத் ⋆
தொல்லை மால் தன் நாமம் ஏத்த ⋆
பொழுதெனக்கு மற்றதுவே போதும் ⋆
கழி சினத்த வல்லாளன் வானரக் கோன் ⋆
வாலி மதன் அழித்த ⋆
வில்லாளன் நெஞ்சத்துளன் ॥ **85** ॥

உளன் கண்டாய் நன் நெஞ்சே ⋆
உத்தமன் என்றும் உளங்கண்டாய் ⋆
உள்ளுவார் உள்ளத்துளன் கண்டாய் ⋆
தன் ஒப்பான் தானாய் ⋆
உளன் காண் தமியேற்கும் ⋆
என் ஒப்பார்க்கீசன் இமை ॥ **86** ॥

இமையப் பெரு மலை போல் ⋆
இந்திரனார்க்கிட்ட ⋆
சமய விருந்துண்டார் காப்பார் ⋆
சமயங்கள் கண்டான் அவை காப்பான் ⋆

கார்க்கண்டன் நான்முகனோடு ⋆
உண்டான் உலகோடுயிர் ‖ **87** ‖

உயிர் கொண்டுடல் ஒழிய ⋆
ஓடும் போதோடி ⋆
அயர்வென்ற தீர்ப்பான் பேர் பாடி ⋆
செயல் தீரச் சிந்தித்து ⋆
வாழ்வாரே வாழ்வார் ⋆
சிறு சமயப் பந்தனையார் வாழ்வேல் பழுது ‖ **88** ‖

பழுதாகாதொன்றறிந்தேன் ⋆
பாற்கடலான் பாதம் ⋆
வழுவா வகை நினைந்து வைகல் தொழுவாரைக் ⋆
கண்டிறைஞ்சி வாழ்வார் ⋆
கலந்த வினை கெடுத்து ⋆
விண் திறந்து வீற்றிருப்பார் மிக்கு ‖ **89** ‖

வீற்றிருந்து ⋆
விண்ணாள வேண்டுவார் ⋆
வேங்கடத்தான் பால் திருந்து வைத்தாரே ⋆
பல் மலர்கள் ⋆
மேல் திருந்து வாழ்வார் ⋆
வருமதி பார்த்தன்பினராய் ⋆
மற்றவர்க்கே தாழ்வாய் இருப்பார் தமர் ‖ **90** ‖

தமர் ஆவார் யாவர்க்கும் ⋆
தாமரை மேலார்க்கும் ⋆
அமரர்க்கும் ஆடரவார்த் தார்கும் ⋆
அமரர்கள் தாள் தாமரை ⋆

மலர்கள் இட்டிறைஞ்சி ⋆
மால் வண்ணன் தாள் தாமரை அடைவோம் என்று ‖ **91** ‖

என்றும் மறந்தறியேன் ⋆
என் நெஞ்சத்தே வைத்து ⋆
நின்றும் இருந்தும் நெடுமாலை ⋆
என்றும் திருவிருந்த மார்பன் ⋆
சிரீதரனுக்காளாய் ⋆
கருவிருந்த நாள் முதலாக் காப்பு ‖ **92** ‖

காப்பு மறந்தறியேன் ⋆
கண்ணனே என்றிருப்பன் ⋆
ஆப்பங்கொழியவும் பல் உயிர்க்கும் ⋆
ஆக்கை கொடுத்தளித்த கோனே ⋆
குணப்பரனே ⋆
உன்னை விடத் துணியார் மெய் தெளிந்தார் தாம் ‖ **93** ‖

மெய் தெளிந்தார் என் செய்யார் ⋆
வேறானார் நீறாக ⋆
கை தெளிந்து காட்டிக் களப்படுத்து ⋆
பை தெளிந்த பாம்பின் அணையாய் ⋆
அருளாய் அடியேற்கு ⋆
வேம்பும் கறி ஆகும் ஏன்று ‖ **94** ‖

‡ ஏன்றேன் அடிமை ⋆
இழிந்தேன் பிறப்பிடும்பை ⋆
ஆன்றேன் அமரர்க்கமராமை ⋆
ஆன்றேன் கடன் நாடும் மண் நாடும் ⋆

கைவிட்டு ⋆
மேலை இட நாடு காண இனி ‖ **95** ‖

‡ இனி அறிந்தேன் ⋆
ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம் ⋆
இனி அறிந்தேன் எம் பெருமான் உன்னை ⋆
இனி அறிந்தேன் காரணன் நீ கற்றவை நீ ⋆
கற்பவை நீ ⋆
நற் கிரிசை நாரணன் நீ நன்கறிந்தேன் நான் ‖ **96** ‖

தசக அடிவரவு — நான்முகன் வாழ்த்துக இவை மேல் காணல் எனக்கு மனக்கேதம் சேயன் கதவு தமராவார் பொய்ந்நின்ற

நான்முகன் திருவந்தாதி முற்றிற்று

திருமழிசைப்பிரான் திருவடிகளே சரணம்